வந்து சேரவில்லை. அவ்வாறு வந்து சேரவில்லை என்றாலும் வாசனை வீசுகின்ற அவருடைய துளசி மாலையினையும் தந்தருளவில்லை. அதனால், இராமாவதாரத்தில் கடல் வழிவிட்டு விலகுமாறு இராவணன் முதலான அரக்கர்கள் அழியுமாறு வென்றதையும்; கிருட்டிணாவதாரத்தில் வட திசையில் உள்ள கயிலை மலைபோலும் தோற்றமுடைய ஏழுகாளைகளையும் அடக்கி வென்றதையும் மறந்து விட்டாரோ?

## இருவிகற்ப நேரிசை வெண்பா

23. இரங்கத் தனித்தனியே யெய்துகின்ற துன்பத்
தரங்கத்தை யேதாற் றடுப்பீ - ரரங்கர்க்குக்
கஞ்சந் திருப்பாதங் கார்மேனி யென்றவர்பா
னெஞ்சந் திருப்பாத நீர்.

பதவுரை : அரங்கர்க்கு திருப்பாதம் - திருவரங்கத்தில் கோயில்கொண்டிருக்கும் அரங்கநாதனுக்கு அவனுடைய திருவடிகள், கஞ்சம் மேனி கார் - தாமரை மலர்போலும், உடம்பு கார்மேகம்போலும், என்று அவர்பால் - என்று அரங்கநாதனின்மீது, நெஞ்சம் திருப்பாத - உங்கள் மனத்தைத் திருப்பாத, நீர் - நீங்கள், இரங்க தனிதனியே எய்துகின்ற - வருத்தம் கொள்ளுமாறு ஒன்றன்மேல் ஒன்றாக வந்து உங்களை அடைகின்ற, துன்ப தரங்கத்தை ஏதால் - துன்பமாகிய அலைகளை வேறு எதனால், தடுப்பீர் - தடுத்து நன்னிலையை அடைவீர்கள்.

தெளிவுரை : திருவரங்கத்தில் கோயில்கொண்டிருக்கும் அரங்கநாதனுக்கு அவனுடைய திருவடிகள் தாமரை போலும், உடம்பு கார்மேகம் போலும் என்று அவன்மீது உங்கள் மனத்தைத் திருப்பாமல், நீங்கள் வருத்தம் கொள்ளு மாறு ஒன்றன்மேல் ஒன்றாகத் துன்ப அலைகள் வந்து உங்களைச் சேர்கின்றபோது அத்துன்பமாகிய அலைகளை வேறு எதனைக் கொண்டு தடுத்து நன்னிலையை அடை வீர்கள்?



## இரங்கல்

## பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்

24. நீரிருக்க மடமங்கை மீர்கிளிகடா மிருக்கமது கரமெலா
நிறைந்திருக்க மடவன்ன முன்னநிரை யாயிருக்க வுரையா மல்யா
னாரிருக் கிலுமென் னெஞ்ச மல்ல தொருவஞ்சமற்ற துணையில்லையென்
றாதரத் தினொடு தூதுவிட்ட பிழையாரிடத் துரைசெய் தாறுவேன்
சீரிருக்கு மறைமுடிவு தேடரிய திருவரங்கரை வணங்கியே
திருத்துழாய் தரில்விரும்பியே கொடுதிரும்பியே வருதலின்றியே
வாரிருக்கு முலைமலர் மடந்தையுறை மார்பிலே பெரிய தோளிலே
மயங்கியின் புறமுயங்கி யென்னையு மறந்து தன்னையு மறந்தே.

பதவுரை : மடமங்கைமீர் - பேதைமைக் குணம் கொண்ட தோழியர்களே, முன்னம் நீர் இருக்க - என் முன்னால் நீங்கள் அனைவரும் இருக்கவும், கிளிகள் இருக்க - கிளிகள் எல்லாம் இருக்கவும், மதுரகம் எலாம் நிறைந்து இருக்க - வண்டுகள் எல்லாம் நிறைந்திருக்கவும், மட அன்னம் நிரை ஆய் இருக்க - அழகு பொருந்திய அன்னப் பறவைகள் கூட்டமாக இருக்கவும், உரையாமல் யான் - இவை எவற்றையும் நான் தூதுசொல்லி அனுப்பாமல், ஆர் இருக்கிலும் என் நெஞ்சம் அல்லது - வேறு யார் இருந் தாலும் என் நெஞ்சம் அல்லாமல், ஒரு வஞ்சம் அற்ற - தீய சிந்தனை அற்ற துணை வேறு இல்லை என்று, துணை வேறு இல்லை என்று ஆதரத்தினோடு தூதுவிட்ட பிழை - அன்போடு தூதனுப்பியதனால் ஏற்பட்ட குற்றத்தை, யாரிடத்து உரைசெய்து ஆறுவேன் - யாரிடத்தில் சொல்லி ஆறுதல் அடைவேன், நான் தூதனுப்பிய மனம், சீர் இருக்கும் மறை முடிவு தேடு அரிய - சிறப்புமிக்க வேதங்களும் தேடிக் கண்டறிய இயலாத, திருவரங்கரை வணங்கி - திருவரங்கத் தில் கோயில் கொண்டிருக்கும் அரங்கநாதனை வணங்கி, நான் அவருடைய நினைவினால் துன்பமடைவதைக் கூறி, விரும்பி திருத்துழாய்தரில் - விருப்பம் கொண்டு அவர் 'துளசி மாலையைத் தந்தருளினால், கொடுதிரும்பி வருதல் இன்றியே - வாங்கிக்கொண்டு திரும்பாமல், வார் இருக்கும் முலை மலர் மடந்தை - கச்சணிந்த முலைகளை உடைய

வளும் தாமரை மலரில் வீற்றிருப்பவளுமாகிய திருமகள், உறைமார்பிலே - உறையும் மார்பில், பெரியதோளிலே - பருத்த தோள்களிலே, மயங்கி - மயக்கம் கொண்டு, இன்புற முயங்கி - இன்பமடைத்து தழுவிக் கொண்டு, என்னையும் மறந்து - தூதனுப்பிய என்னையும் மறந்து, தன்னையும் மறந்து - தூது சென்றோம் என்ற நினைவையும் மறந்துவிட்டது.

தெளிவுரை : பேதைமைக் குணம்கொண்ட தோழியர்களே! என் முன்னால் நீங்கள் அனைவரும் இருக்கவும், கிளிகள் எல்லாம் இருக்கவும், வண்டுகள் எல்லாம் நிறைந்திருக்கவும், அழகு பொருந்திய அன்னப் பறவைகள் கூட்டமாக இருக்கவும், இவை எவற்றையும் நான் தூதுசொல்லி அனுப்பாமல் வேறு யார் இருந்தாலும் என் நெஞ்சம் அல்லாமல் தீய சிந்தனை அற்றதுணை வேறு இல்லை என்று அன்போடு தூதனுப்பியதனால் ஏற்பட்ட குற்றத்தை யாரிடம் சொல்லி ஆறுதல் அடைவேன்? நான் தூதாக அனுப்பிய மனம், சிறப்புமிக்க வேதங்களும் தேடிக் கண்டறிய இயலாத திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் அரங்கநாதனை வணங்கி நான் அவருடைய நினைவினால் துன்பமடைவதைக் கூறி விருப்பம் கொண்டு அவர் துளசி மாலையைத் தந்தருளினால் வாங்கிக்கொண்டு திரும்பாமல், கச்சணிந்த முலைகளை உடைவளும் தாமரை மலரில் வீற்றிருப்பவளுமாகிய திருமகள் உறையும் மார்பில், பெரிய தோள்களில் இன்புற்று மயங்கி தழுவிக்கொண்டு தூதாக அனுப்பியதையும், தான் தூதாக வந்திருக்கிறோம் என்பதையும் மறந்தது.

## வண்டு

### இருவிகற்ப நேரிசை வெண்பா

25. மறக்குமோ காவின் மதுவருந்தி யப்பாற்
பறக்குமோ சன்னிதிமுன் பரமோ - சிறக்கத்
திருவரங்கள் கேட்குமோ தாழ்க்குமோ நெஞ்சே
திருவரங்கர் பாற்போன தேன்



பதவுரை : நெஞ்சே - மனமே, திரு அரங்கர்பால் சென்ற - மேன்மைமிக்க அரங்கநாதரிடம் தூதுசென்ற, தேன் காவில் மது அருந்தி - வண்டு தேன் நிறைந்த மலர்களில் அமர்ந்து தேனைக் குடித்து, மறக்குமோ - தூதனுப்பிய என்னை மறந்துவிடுமோ? அவ்வாறல்லாமல், அப்பாற் பறக்குமோ - சோலைகளைக் கடந்து பறந்து செல்லுமோ? சன்னிதி முன்பு ஆமோ - பறந்து சென்று அரங்கநாதனின் திருக்கோயில் வாசலை அடையுமோ?' அடைந்து, சிறக்க தரு வரங்கள் கேட்குமோ - எனக்கு மகிழ்ச்சி உண்டாகுமாறு வரங்களைக் கேட்டகுமோ?' அப்படியும் இல்லாமல், தாழ்க்குமோ - தயங்கித் தயங்கி நிற்குமோ? அதை என்மனம் அறியவில்லை.

தெளிவுரை : மனமே! மேன்மைமிக்க அரங்கநாதரிடம் தூது சென்ற வண்டு தேன் நிறைந்த மலர்களில் அமர்ந்து தேனைக் குடித்து அந்த மயக்கத்தால் என்னை மறந்துவிடுமோ? அவ்வாறல்லாமல் சோலைகளைக் கடந்து பறந்து செல்லுமோ? அரங்கநாதனின் திருக்கோயில் வாசலை அடையுமோ? அடைந்து எனக்கு மகிழ்ச்சி உண்டாகுமாறு வரங்களைக் கேட்குமோ? தயங்கித் தயங்கி நின்று காலம் தாழ்த்துமோ? அதை என் மனம் அறியவில்லை.

## அம்மானை

### கலித்தாழிசை

26. தேனமருஞ் சோலைத் திருவரங்க ரெப்பொருளு
மானவர்தா மாண்பெண் ணலியலர்கா ணம்மானை
யானவர்தா மாண்பெண் ணலியலரே யாமாகிற்
சானகியைக் கொள்வரோ தாரமா யம்மானை
தாரமாக் கொண்டதுமோர் சாபத்தா லம்மானை.

பதவுரை : தேன் அமரும் சோலை - வண்டுகள் விருப்பம் கொண்டு மலர்களை நாடுகின்ற சோலைகளை உடைய, திருவரங்கர் எ பொருளும் ஆனவர்தாம் - திருவரங்கத்தில் கோயில்கொண்டிருக்கும் அரங்கநாதர் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பவர், எனினும், ஆண் பெண் அலி

அவர் காண் - ஆண் பெண் அலி என்று கூறப்படும் தன்மைகள் அற்றவராவார், அம்மானை - என்று அம்மானை பாடுவாயாக, ஆனவர்தாம் - எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கும் அவர், ஆண் பெண் அலி அலரே ஆம் ஆகில் - ஆண் பெண் அலி என்னும் உருவங்கள் இல்லாதவர் என்றால், சானகியை தாரம் ஆ கொள்வரோ - சானகியை மனைவியாகக் கொண்டிருப்பாரோ, அம்மானை - என்று அம்மானை பாடுவாயாக, தாரம் ஆ கொண்டதும் - அவ்வாறு சானகியை மனைவியாகக் கொண்டதும், ஓர் சாபத்தால் - ஓர் சாபத்தினால்தான் என்று, அம்மானை - அம்மானை பாடுவாயாக.

தெளிவுரை : வண்டுகள் விருப்பம் கொண்டு மலர்களை நாடுகின்ற சோலைகளை உடைய திருவரங்கத்தில் கோயில் கொண்டிருக்கும் அரங்கநாதர் எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருப்பவர் எனினும் ஆண் பெண் அலி என்று கூறப்படும் தன்மைகள் அற்றவராவார் என்று அம்மானை பாடுவாயாக. எல்லாப் பொருள்களிலும் நிறைந்திருக்கும் அவர் ஆண் பெண் அலி என்னும் உருவங்கள் இல்லாதவர் என்றால் சானகியை மனைவியாகக் கொண்டிருப்பாரோ என்று அம்மானை பாடுவாயாக. அவ்வாறு சானகியை மனைவியாகக் கொண்டதும் ஓர் சாபத்தினால்தான் என்று அம்மானை பாடுவாயாக.

## நற்றாய் இரங்கல்
## பதினான்குசீர் ஆசிரிய விருத்தம்

27\. மானை எய்தவ ரின்ன மென்மட மானை யெய்திலர் நேமியான்
மாலை தந்தவர் பைந்து ழாய்மது மாலை தந்தில ரிந்திரன்
சோனை மாரி விலக்கி விட்டவர் சோரிகண் மாரி விலக்கிலார்
சுர்களுக் கமுதங் கொடுத்தவர் சோதிவா யமுதங் கொடார்
தானை யைவர் கொடிக் களித்தவர் தானை கொண்ட தளிக்கிலார்
சங்கரற் கிரவைத் தடுத்தவர் தையலுக் கிரவைத் தடா
ரானை முன்வரு மன்புளார்முலை யானைமுன்வரு மன்பிலா
ரணியரங்கர் நடத்து நீதி யநீதியாக விருந்ததே.



பதவுரை : மானை எய்தவர் இன்னம் - சீதையின் பொருட்டாக முன்பு மாய மானாக வந்த மாரீசனை அம்பினால் எய்தவர் இன்னும், என் மட மானை - என்னுடைய மடமை பொருந்திய மானாகிய மகளை, எய்திலர் - வந்து சேரவில்லை, நேமியால் மாலை தந்தவர் - பாரதப் போரில் தன் கையில் உள்ள சக்கரத்தால் மாலைப் பொழுதை உருவாக்கியவர், பைந்துழாய் மதுமாலை தந்திலர் - என் மகளுக்கு பசியதும் தேன் நிரம்பியதுமான துளசி மலர் மாலையைக் கொடுத்தருளவில்லை, இந்திரன் சோனைமாரி - முன்பு இந்திரனால் பெய்விக்கப்பட்ட பெருமழையை விலக்கிவிட்டவர் - கோவர்த்தன மலையைக் குடையாகப் பிடித்து மழையில் இருந்து கோவலர்களையும் ஆநிரைகளையும் காத்தருளியவர், சோரிகண் மாரி விலக்கிலர் - என் மகளின் கண்களில் இருந்து பெய்யும் பெருமழையாகிய கண்ணீரைத் தடுத்து நிறுத்துகின்றார் இல்லை, சுர்களுக்கு அமுதம் கொடுத்தவர் - முன்னாளில் பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதம் கொடுத்தவர் - முன்னாளில் பாற்கடலைக் கடைந்து தேவர்களுக்கு அமுதம் கொடுத்தவர். சோதிவாய் அமுதம் கொடார் - என் மகளுக்குத் தன் ஒளி பொருந்திய வாயில் ஊறும் அமுதத்தைக் கொடுத்தருளவில்லை, ஐவர் கொடிக்கு தானை அளித்தவர் - பாண்டவர்களின் மனைவியாகிய திரௌபதிக்குத் துரியோதனன் அவையில் மேலும் மேலும் வளரும்படித் துகிலைக் கொடுத்தவர். தானை கொண்டது அளிக்கிலார் - தான் கொண்டிருக்கும் ஆடையினை என் மகளுக்குக் கொடுத்து அவளின் துயரத்தைத் தீர்க்கின்றார் இல்லை, சங்கரற்கு இரவை தடுத்தவர் - சிவபெருமான் பிச்சை எடுத்து அலைந்ததைப் போக்கி அருளியவர்,, தையலுக்கு இரவை தடார் - என் மகளுக்கு நீண்டு வளரும் இரவுப் பொழுது துன்பமாய் வளர்வதைத் தடுக்கின்றார் இல்லை, ஆனை முன்வரும் அன்புளார் - கசேந்திரன் என்னும் யானைக்குமுன் எழுந்தருளி அதன் துன்பத்தைத் தீர்த்தவர், முலையானை முன்வரும் - என் மகளின் முலைகளாகிய யானைகளின் முன்தோன்றி

அவற்றிற்கு. அன்பு இலார் - அன்பு தரும் குணமில்லாத வராக இருக்கிறார், அதனால், அணி அரங்கர் நடத்தும் நீதி - அழகு பொருந்தியவராகிய அரங்கநாதர் செய்யும் செயல்கள் எல்லாம், அநிதி ஆக இருந்தது - அறமல்லாச் செயல்களாக இருக்கிறது.

தெளிவுரை : சீதையின் பொருட்டாக முன்பு மாய மானாக வந்த மாரீசனை அம்பினால் எய்தவர் இன்னும் என்னுடைய மடமை பொருந்திய மானாகிய மகளை வந்து சேரவில்லை. பாதப் போரில் தன்கையில் உள்ள சக்கரத்தால் மாலைப் பொழுதை உருவாக்கியவர் என்மகளுக்குப் பசியதும் தேன் நிரம்பியதுமான துளசி மலர் மாலையைக் கொடுத்தருளவில்லை. முன்பு இந்திரனால் பெய்விக்கப்பட்ட பெருமழையைக் கோவர்த்தன மலையைக் குடையாகக் கொண்டு மழையில் இருந்து கோவலர்களையும் ஆநிரை களையும் காத்தருளியவர் என் மகளின் கண்களில் இருந்து பெய்யும் பெருமழையாகிய கண்ணீரைத் தடுத்து நிறுத்து கின்றாரில்லை. முன்னாளில் பாற்கடலைக் கடைந்து தேவர் களுக்கு அமுதம் கொடுத்தவர் என்மகளுக்குத் தன் ஒளி பொருந்திய வாயில் ஊறும் அமுதத்தைக் கொடுத்தருள வில்லை. பாண்டவர்களின் மனைவியாகிய திரௌபதிக்குத் துரியோதனன் அவையில் மேலும் மேலும் வளரும்படித் துகிலைக் கொடுத்தவர் தான் கொண்டிருக்கும் ஆடையினை என்மகளுக்குக் கொடுத்து அவளின் துயரத்தைத் தீர்க்கின் றார் இல்லை. சிவபெருமான் பிச்சை எடுத்து அலைந்ததைப் போக்கி அருளியவர் என்மகளுக்கு நீண்டு வளரும் இரவுப் பொழுது துன்பமாய் வளர்வதைத் தடுக்கின்றார் இல்லை. கசேந்திரன் என்னும் யானை அழைத்த அளவில் எழுந்தருளி அதற்கு அன்பு காட்டியவர் என் மகளின் முலைகளாகிய யானைகளின் முன்தோன்றி அவற்றிற்கு அன்பு செய்கின் றாரில்லை. அதனால் அழகுபொருந்தியவராகிய அரங்கநாத ரின் அறம் நடத்தும் முறை அநீதியாகவே இருக்கிறது.



### எண்சீர் ஆசிரிய விருத்தம்

28. இருளினும் வெளியினு மருளினுந் தெருளினு
மின்பமே யடையினுந் துன்பமே மிடையினு
மொருவர் முன்புகழினு மிருவர்பின் பிகழினு
மூனிறந் தழியினும் யான்மறந் தொழிவனோ
கருதிநின் றோலிடுங் கரதலந் நாலொடுந்
துவளுநூன் மார்பமும் பவளவாய் மூரலுந்
திருவரங் கேசர்தஞ் சுருள்கருங் கேசமுஞ்
செய்யாநீண் முடியுமத் துய்யசே வடியுமே

பதவுரை : இருளினும் வெளியினும் - இரவுப் பொழு திலும் பகல் பொழுதிலும், மருளினும் தெருளினும் - மயக்கம் கொண்டிருக்கும் காலத்திலும் மயக்கம் நீங்கித் தெளிவுபெற்றிருக்கும் காலத்திலும், இன்பமே அடையினும் - இன்பங்கள் தானாக வந்து சேர்ந்தாலும், துன்பமே மிடை யினும் - துன்பங்கள் நெருங்கிவந்து சேர்ந்தாலும், ஒருவர் முன் புகழினும் - ஒருவர் முன்பாக வந்து நின்று புகழ்ச்சியான சொற்களைக் கூறினாலும், இருவர் பின்பு இகழினும் - பலருடைய பின் சென்று இகழ்ச்சியானவற்றைக் கூறினாலும், ஊன் இரந்து அழியினும் யான் - உடம்பு நிலையில்லாமல் அழிந்து போனாலும் நான், திருவரங்கேசர்தம் - திருவரங் கத்தில் கோயில்கொண்டிருக்கும் அரங்கநாதரின், கருதி நின்று ஒலிடும் - நான்கு வேதங்களும் புகழ்ந்து கூறும், கரதலம் நாலொடும் - திருக்கரங்கள் நான்கினையும், துவளும் நூல் மார்பமும் - மூன்று புரிகளை உடைய நூல் தழுவிக் கிடக்கும் மார்பையும், பவளம்வாய் - பவளம் போன்ற நிறத்தை உடைய வாயில் உதிக்கும் புன் சிரிப்பையும், சுருள் கருங் கேசமும் - சுருண்ட கருமையான குழலினையும், செய்ய நீள் முடியும் - செம்மை பொருந்திய அழகிய மேன்மைமிக்க முடியினையும், அதுய்ய சேவடியும் - அவ்வாறாகிய தூய்மையான திருவடிகளையும், மறந்து ஒழிவனோ - நான் மறந்திருப்பேனோ?

தெளிவுரை : இரவுப் பொழுதிலும், பகல்பொழுதிலும், மயக்கம் கொண்டிருக்கும் காலத்திலும், மயக்கம் நீக்கித்

தெளிவுபெறும் காலத்திலும், இன்பங்கள் தானாக வந்து சேர்ந்தாலும், துன்பங்கள் நெருங்கி வந்து சேர்த்தாலும் ஒருவர் முன்பாக வந்துபுகழ்ச்சியான சொற்களைக் கூறினாலும், பின்சென்று பலருடன் இருந்து இகழ்ச்சியான சொற்களைக் கூறினாலும், உடம்பு நிலையில்லாமல் அழிந்து போனாலும் நான், திருவரங்கத்தில் கோயில்கொண்டிருக்கும் அரங்கநாதனின் வேதங்கள் புகழும் திருக்கரங்கள் நான்கையும், மூன்று புரிகளை உடைய நூல் தழுவிக் கிடக்கும் மார்பையும் பவளம் போன்ற நிறத்தை உடைய வாயில் உதிக்கும் புன்சிரிப்பையும், சுருண்ட கருமையான குழலினையும், செம்மை பொருந்திய அழகிய முடியினையும், அவ்வாறாகிய தூய்மையான திருவடிகளையும் நான் மறந்திருப்பேனோ?

### இருவிகற்ப நேரிசை வெண்பா

29. **சேவடியான் மூவடிமண் டென்னரங்கத் தம்மானீ**
**மாவலிபால் வாங்கியநாண் மண்ணுலகோ - மூவுலகும்**
**வீசுங்கா லோவலிய வெவ்வினையே னெஞ்சமோ**
**பேசுங்கா லேதோ பெரிது.**

பதவுரை : தென் அரங்கத்து அம்மான் நீ - தென்னகத்தில் உள்ள திருவரங்கத்தில் கோயில்கொண்டிருக்கும் திருவரங்க நாதனே! நீ, சேவடியால் - உன்னுடைய மேன்மைமிக்க சிவந்த அடிகளால், மூஅடி மண் மாவலிபால் வாங்கிய நாள் - மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்று அடிமண் கேட்டு, உலகம் முழுவதையும் இரண்டு அடிகளால் அளந்தபொழுது, மண் உலகமோ - நில உலகமோ, மூ உலகும் வீசும் காலோ - மூன்று உலகங்களிலும் பரவியிருந்த திருவடிகளோ, வலிய வெம் வினையேன் நெஞ்சமோ - அந்தத் திருவடிகளை என்னுள் அடக்கியிருக்கின்ற வலிமையான வினைகளை உடைய என்னுடைய நெஞ்சமோ, பேசும்கால் ஏதோ பெரிது - பேச முற்படும்போது எது பெரியது?

**தெளிவுரை** : தென்னகத்தில் உள்ள திருவரங்கத்தில் கோயில்கொண்டிருக்கும் திருவரங்கநாதனே! நீ உன்னுடைய



மேன்மைமிக்க சிவந்த அடிகளால் மாவலிச் சக்கரவர்த்தியிடம் மூன்று அடி மண்கேட்டு உலகம் முழுவதையும் இரண்டு அடிகளால் அளந்தபொழுது நில உலகமோ? மூன்று உலகங்களிலும் பரவியிருந்த திருவடிகளோ? அல்லது அந்தத் திருவடிகளை என்னுள் அடக்கியிருக்கின்ற வலிமையான வினைகளை உடைய என் நெஞ்சமோ? பேச முற்படும்போது எது பெரியது.

### நாரைவிடு தூது

### நிரையசையை முதலாக உடைய கட்டளைக் கலித்துறை

30. **பெருவரங் கேசவ னல்லா தருள்செயும் பேரிலைவே**
**றொருவரங் கேசற் றுமோதா ரென்காதலை யோடியெங்குங்**
**கருவரங் கேசலிக்கத் திரிவோர்க்குக் கருணை செய்யுந்**
**திருவரங் கேசற்கு நீசொல்ல வேண்டுஞ் செழுங்குருகே.**

பதவுரை : செழுங்குருகே - செழுமையாக விளங்கும் நாரையே!, பெருவரம் அருள் செயும் பேர் - பெரிய வரங்களைக் கொடுத்து அருள்கின்றவரான, கேசவன் அல்லாது - கேசவனாகிய திருமால் அல்லாமல், இலை - வேறு ஒருவரும் இல்லை, அங்கே ஓடி விரைந்து - அக்கேசவனிடம் ஓடிச் சென்று, என் காதலை வேறு ஒருவர் - நான் அவன்மேல் கொண்ட காதலை, வேறு ஒருவர், சற்றும் ஓதார் - சிறிதும் எடுத்துக்கூற மாட்டார், ஆகையினால், எங்கும் கரு அரங்கே - எல்லாப் பிறப்புகளிலும் கருவிலேயே, சலிக்க திரிவோர்க்கு - துன்பம் உண்டாகுமாறு, திரிவோர்க்கு - பலபிறவிகள் எடுத்து அலைந்து திரிபவர்களுக்கு, கருணை செய்யும் திருவரங்கேசற்கு - அருள்வழங்கும் திருவரங்க நாதனுக்கு, நீ சொல்ல வேண்டும் - நீ விரைந்து சென்று என் நிலையைத் தூது சொல்லி வரவேண்டும்.

**தெளிவுரை** : செழுமையாக விளங்கும் நாரையே! பெரிய வரங்களைக் கொடுத்து அருள்கின்றவரான கேசவனாகிய திருமால் அல்லாமல் வேறு ஒருவரும் இல்லை. அக்கேசவனிடம் ஓடிச் சென்று நான் அவன்மேல் கொண்